ජාතික ප්‍රතිපත්ති හා ආර්ථික කටයුතු අමාත්‍යාංශය
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு
MINISTRY OF NATIONAL POLICIES AND ECONOMIC AFFAIRS

"මිලෝදා" (පැරණි ටයිම්ස් ගොඩනැගිල්ල), පළමු මහළ, බ්‍රිස්ටල් වීදිය, කොළඹ 01. / 'மிலோதா', 1ஆம் மாடி,பிரிஸ்டல் வீதி,கொழும்பு 01./ "Miloda"(Old Times Building), 1st Floor, Bristol Street, Colombo 01.

මගේ අංකය / எனது இல / My No: MNPEA/PLN/DCB/2017/Circular
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 03.02.2017

சுற்றறிக்கை இலக்கம் : **MNPEA 04/2016 (ii)**

சகல மாவட்ட செயலாளர்களுக்கும்,

<u>பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் -2017</u>

பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் -2017 தொடர்பாக 04.11.2016 ஆம் திகதியிடப்பட்ட MNPEA 04/2016 இலக்க சுற்றறிக்கை மீது தங்களது தயவான கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

2. மேற்குறித்த சுற்றறிக்கையின் பந்தி இலக்கம் 3.4 பின்வருமாறு திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

   **3.4.** அனைத்து ஒப்பந்தங்களும் கொள்வனவு நடைமுறைகளுக்கு அமைவாக அமுல்படுத்தப்படல் வேண்டும், எனினும், கருத்திட்டங்கள் ரூபா **500,000.00** ற்கு மேற்பட்டிருப்பின் அக் கருத்திட்டங்களை அமுல்படுத்த நேரடி ஒப்பந்தங்கள் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

3. மேற்குறித்த சுற்றறிக்கையின் பிரிவு **1.11** மற்றும் **2.8** ஆகியற்றைப் பாக்கவும். வருமானம் குறைந்த கிராமிய இளைஞர்களதும் பெண்களதும் வருமானத்தைப் பெருக்குதல் மற்றும் வறுமையை ஒழித்தல் ஆகியவற்றை நோக்காக் கொண்டு **இணைப்பு 01** இல் குறிப்பிட்டுள்ள துறைகளில்/ பிரிவுகளில் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் இயலுமைகளை அதிகரிக்கும் வகையிலான பயிற்சி திட்டங்கள் நடைமுறைப் படுத்துவதற்காகப் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் -2017 இன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியினைப் பயன்படுத்த முடியும்.

4. தயவுசெய்து இக்கடிதத்தினை தற்களது மாவட்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட, பிரதேச செயலக மட்ட இணைப்புக்குழு உறுப்பினர்களுக்கு அறியப்படுத்தவும்.

**எம் ஐ எம் றபீக்**
செயலாளர்.

**பிரதிகள் :**

1. அனைத்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் – தகவலுக்காக
2. செயலாளர், நிதி அமைச்சு – தகவலுக்காக
3. செயலாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சு – தகவலுக்காக
4. செயலாளர், மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு – த.அ.ந



දුරකථන / தொலைபேசி / Telephone: + 94 – 11- 4461500
ෆැක්ස් / தோலைநகல / Fax: + 94 – 11- 2339732, + 94 – 11- 2440636
විද්‍යුත් තැපැල / மின்னஞ்சல / E-mail: info@mnpea.gov.lk
Website: www.mnpea.gov.lk

5. செயலாளர், சட்டம் ஒழுங்கு மற்றும் தென் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு – த.அ.ந
6. செயலாளர், உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு– த.அ.ந
7. செயலாளர், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனரநிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு – த.அ.ந
8. செயலாளர், பிராந்திய அபிவிருத்தி அமைச்சு – த.அ.ந
9. சகல மாகாணங்களினதும் பிரதம செயலாளர்கள் – தகவலுக்காக
10. கணக்காய்வாளர் நாயகம் – தகவலுக்காக
11. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் – த.அ.ந
12. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம் – த.அ.ந
13. பணிப்பாளர் நாயகம், கருத்திட்ட முகாமை மற்றும் கண்காணிப்பு திணைக்களம் -த.அ.ந
14. சகல மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்கள் - த.அ.ந

**பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் -2017 இன் கீழ் பயிற்சிநெறி வசதிகள்**

04.11.2016 ஆம் திகதிய MNPEA 04/2016 இலக்கச் சுற்றறிக்கையின் 1.11 மற்றும் 2.8 பிரிவுகளைப் பார்க்கவும்;

பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் -2017 கீழ் குறிப்பிடப்படும் துறைகள்/ பிரிவுகளுடன் தொடர்பான பயிற்சி நெறிகளை / பாட நெறிகளை நடாத்துவதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதியை ஒதுக்கீடு செய்யமுடியும்.

1. தொழில் வாய்ப்புக்களை இலக்காகக் கொண்ட பயிற்சிப் பாடநெறிகள்

   I. கட்டுமானங்கள் மற்றும் கைத்தொழில் துறையில் கனரக வாகனங்கள் /இயந்திர உபகரணங்கள் பயிற்சிப் பாடநெறி
   II. தகவலத் தொழி நுட்பம்(IT) / வரைகலை வடிவமைப்பு (Graphic Design) பாடநெறிகள்
   III. மோட்டார் (மெகானிக்) தொழிநுட்பப் பாடநெறி
   IV. மரவேலை (வேலைத்தளத்துடன் தொடர்பானது)
   V. கணனி, கையடக்கத் தொலைபேசிகள், இலத்திரனியல் மற்றும் மின் உபகரணங்கள் பழுதுபார்த்தல்.

   - தெரிவு செய்யப்பட்ட பாடநெறிக்காக ஒரு நபருக்கு/ ஒரு பயனாளிக்கு **20,000/-** ரூபாவை விட அதிகரிக்காத வகையில் ஒரு தொகையினை நேரடியாக பாடநெறியை நடாத்தும் நிறுவனத்திற்கு ஒதுக்க முடியும்.

2. **சுய தொழிலை இலக்காகக் கொண்ட தொழிற் பயிற்சிப் பாடநெறிகள்**
   - அலங்கார மீன்கள் / பூஞ்செடிகள், வெட்டிய பூக்கள், அலங்கார மரங்கள் மற்றும் பழக் மரக் கைத்தொழில்
   - குழாய்கள் பொருத்துதல் மற்றும் அலுமினியப் பொருத்துதல் தொடர்புடைய செயற்பாடுகள்
   - பாலுடன் தொடர்புடைய கைத்தொழில்கள்
   - மரக்கறி, பழங்கள் மற்றும் பலசரக்குப் பொருட்களுடன் தொடர்புடைய பெறுமதி சேர்க்கப்படும் (value addition) கைத்தொழில்கள்.
   - தையற்செயற்பாடுகள் - இதன் கீழ் சுவர் அலங்காரங்கள், திரைச்சீலைகளைத் தைத்தல் மற்றும் அவற்றைப் பொருத்துதல், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் சந்தையை இலக்காகக் கொள்ளப்பட்ட ஏனைய உற்பத்திகள்.
   - அழகுச் சிகிச்சை பாடநெறிகள்
   - பிரதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வரும் கைத்தொழில்களுடன் தொடர்பான பயிற்சிப் பாடநெறிகள் - இதன் கீழ் மட்பாண்டக் கைத்தொழில், தும்புடன் தொடர்பான உற்பத்திக் கைத்தொழில்கள், கித்துல் கைத்தொழில், பனைக் கைத்தொழில் மற்றும் ஏனைய கைத்தொழில்கள்.

- ஒரு பாட நெறிக்கு **குறைந்தது 15 பயனாளிகள்** உள்ளடக்கப்படல் வேண்டும். வளவாளர்களுக்கான கொடுப்பனவுகள் அடங்கலாக **100,000/-** ரூபாவிற்கு மேற்படாத வகையில் ஒரு தொகையை ஒதுக்கீடு செய்ய முடியும்.

**பொதுவான அறிவுறுத்தல்கள்:**

- பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஒதுக்கப்படும் மொத்த நிதி ஒதுக்கீட்டில், வரையறுக்கப்பட்டு 30% உச்சளவுக்குட்பட்ட வகையில் சமூக நலனோம்புகை நடவடிக்கைகளுக்காகவும் முற்றும் இந்தப் பாட நெறிகளுக்காக நிதியை 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒதுக்கீடு செய்ய முடியும்.